## இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் -2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கழைக்கழகத்தின், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்டதாரிமாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் (ஐஆர்கியூயூஈ) செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் பல்கலைக்கழகத்திற்கு சொத்துக்களை செயற்திட்டம் கையளித்திருந்த போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,555,427 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நி.பி 102 | 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகை நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | பல்வேறு நோக்கங்களிற்காகச் செலுத்தப்பட்டதும் 01 ஆண்டு தொடக்கம் 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்ட காலமாக பயன்படாதுள்ளதுமான ரூபா 14.61 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 756 | பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி 1646 | பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவனைகள் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை**

| | |
|---|---|
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு – 3.1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 516,211,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் உள்ள ரூபா 84,147,590 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 437,448,075 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 59,498,212 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 24,649,378 ஆல் மேலும், ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா 96,267,379 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான பங்களிப்பாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

**(அ) நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்**

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் நடைபெற்ற பரீட்சைகளில் பட்டதாரி மாணவர்களின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | நடைபெற்ற பரீட்சைகளின் காலம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை (முதலாண்டு தொடக்கம் இறுதி ஆண்டு வரை) | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை (இறுதி ஆண்டு) |
|---|---|---|---|
| விவசாயம் | 2012 மார்ச், ஏப்ரல் ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 175 | 27 |
| கலை | 2012 மார்ச், ஏப்ரல், யூன், யூலை, ஒக்தோபர் மற்றும் நொவம்பர் | 1220 | 333 |
| வர்த்தகமும் முகாமைத்துவமும் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை, செப்தெம்பர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 716 | 91 |
| விஞ்ஞானம் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 422 | 48 |
| சுகாதார பராமரிப்பு விஞ்ஞானம் | 2012 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர் | 238 | 27 |
| | மொத்தம் | 2,771 | 526 |

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 482,847,281 தொகையாகும். ஆண்டிற்கான ஒரு மாணவருக்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 174,376 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 43,705 ஆல் அதிகரித்திருந்தது.

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டில் 5503 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 11,833,100 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 8301 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 16,598,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) நூலக முகாமைத்துவம்**

நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த கல்விசார் பதவியினர் மற்றும் மாணவர்களால் குறித்த காலத்திற்கிடையில் 409 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்காக முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்கு சென்ற பல்கலைக்கழகத்தின் 57 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எனினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அந்த 57 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 70,407,561 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கல்விசார் பதவியணியிலிருந்த 52 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2012 திசெம்பர் 31 வரை பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை ஆகையால், அது பிரதானமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதித்திருந்தன.

(இ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் பட்டபின் படிப்பு பாடநெறிக்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசி) அங்கீகாரம் 2012 திசெம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 22 பட்டபின்படிப்பு பாடநெறிகள் யூஜீசி இன் அங்கீகாரம் இல்லாமல் நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) 54 நபர்களிற்கு ரூபா 1.18 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்துடன் நபர்களை இனங்கண்டு முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 ஆண்டுகள் தொடக்கம் 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்டகாலமாக இந்த முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்தன.

## 3.3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு

சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சிஎஸ்) பயன்பாட்டிற்காக இந்தியாவிலுள்ள ஒரு தனியார் கம்பனியிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13.4 மில்லியள் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தக் கொள்னவிற்காக மூன்று கேள்விதாரர்கள் தமது கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தனர். இந்த 3 கேள்விகளில், இரண்டு கேள்விகள் மோசடியானவையானதுடன் ஒரு கேள்வி ஆடை தயாரிப்பு உபபாகங்கள் வழங்குனரிடமிருந்தானதாகும்.

(ii) இரண்டு கேள்விதாரர்கள் அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் முகவரிகளில் இனங்காணப்பட்டனர்.

(iii) “எட்டு ரிஸ்யூ செயன்முறை உபபாகங்கள்” என்றழைக்கப்படும் இந்த மருத்துவ உபகரணம் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு

செய்யப்பட்டிருந்த போதிலும் ரிஸ்யூ செயன்முறையின் பிரதான பகுதி இன்மையால் கொள்வனவுத் திகதியிலிருந்து பயன்பாடின்றியிருந்தது.

(iv) இந்த உபகரணத்திற்காக உள்நாட்டு வழங்குனர்களைக் கருத்திற்கொள்ளாது மூன்று கூறு விலைகளும் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தன.

(v) தரப்பட்ட தகவல்களின் படி, உபகரணங்களிற்காக செலுத்தப்பட்ட விலைகள் சர்வதேச சந்தையில் நிலவிய சந்தை விலைகளிலும் பார்க்க உயர்வானதாக இருந்தன. சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

| விடயத்தின் பெயர் | சந்தை விலை (ஐ.அ.டொலர்) | கொள்வனவு செய்த விலை (ஐ.அ.டொலர்) |
|---|---|---|
| பிரேத அறை குளீரூட்டி (பிரேத அறை பீடங்கள்) | 1,320 – 7,900 (வீச்சில்) | 26,000 |
| அவற்றாசவுன்ட் ஸ்கானர் | 8,000 – 15,000 | 36,324 |
| பைனாகுலர் மைக்குறோஸ்கோப் | 2,123 – 4,425 | 9,015 |

**(ஆ) நூலக தானியங்கி முகாமைத்துவ மென்பொருள் (லிப்சீஸ்) ஐ.அ.டொலர் 27,400 (ரூபா 3.2 மில்லியன்) இல் கொள்வனவு**

2008 ஆம் ஆண்டில் இந்தியா, ஹரியானாவிலுள்ள வ/ப எம்எஸ் லிப்சிஸ் ரெக்னொலொஜீஸ் பீவீரீ, இலிருந்து லிப்சிஸ் மென்பொருள் முறைமை ரூபா 3.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் கொள்வனவுவிற்கு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) சிபார்சு செய்திருக்கவில்லை.

(ii) கொள்வனவுக் குழுவின் (பீசீ) அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்கலைக்கழகம் வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(iv) பல்கலைக்கழகம் வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணை முறியை பெற்றிருக்கவில்லை.

(v) ஒப்பந்தத்தின் கடிதத்தின் படி, வழங்குனர் ‘‘லீனக்ஸ்’’ முறைமையை வழங்கியிருக்க வேண்டும். எனினும் வழங்குனர் 2009 ஏப்ரல் 27 இல் வின்டோஸ் முறைமையை வழங்கி நிறுவியிருந்தார்.

(vi) தரவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மாதிரி, அறிக்கை உருவாக்கல் மாதிரி, மற்றும் தரவு பின்னறக்க மாதிரி என்றவாறான முறைமைப் பாகங்களின்மையால் ‘‘லிப்சிஸ்’’ முறைமை அதன் முழு இயலளவில் செயற்படுத்தப்படவில்லை என்று பௌதீக பரிசோதனையில் வெளிப்பட்டது.

(vii) வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ஐ.அ.டொலர் 10,960 (மொத்த கிரயத்தின் 40%) கொடுப்பனவு செய்யாதமையால் நிறுவிய பின்னர் 3 ஆண்டுகளாக ஆண்டு ஆதரவுச் சேவையை வழங்குனர் மேற்கொண்டிருக்கவில்லை.

(viii) இந்த முறைமை, 2008 ஆம் ஆண்டில் ரூபா 3.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த முறைமை நூலகத்தில் 2009 ஏப்ரல் 27 இலேயே நிறுவப்பட்டிருந்தது.

**(இ)** சுகாதார பராமரிப்பு பீடத்தில் தாதியார் நிகழ்ச்சித்திட்டத்தில் பீஎஸ்சி பட்டத்திற்கு வசதியளிப்பதற்காக நோர்வேயின் ரீஆர்ஔஎம்எஸ்ஓ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,372,951 தொகை நிதி கிடைத்திருந்த போதிலும் இது தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தின் சபை மற்றும் செனற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### 4.2 கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டில் 09 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழு பல கூட்டங்களிலும் கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிக்கும்படி சிபார்சு செய்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் கணககாய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 06 ஐய வினாக்களிற்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

(ஈ) கொள்வனவுகள்